கப்படுகிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே பல ஆயிரக் கணக்கான கண்மாய்கள், குளங்கள், இன்றைக்கு வறண்டு இருக்கின்றன. அப்பேற்பட்ட இடங்களில், பெரிய பெரிய ராட்சத கிணறுகளை அமைத்து தண்ணீரைத் தேக்கி வைத்து, பக்கத்து கிணறுகளுக்கு கொடுக்க வேண்டும். அதோடு கால்நடைகளுக்கும், ஆடு மாடுகளுக்கும் தண்ணீர் கொடுக்க ஏதுப்பாக இருக்கும். இந்தத் திட்டத்தை ஏற்கெனவே தெரிவித்ததைப் போல 'கிரஷ்' புரோகிராமாகப் போட்டு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, முதலாவது கட்டமாக முன்னாள் ஜமீன் குளங்களாக இருந்ததை இப்போது பொதுப்பணித்துறை நேரடியாக எடுத்து, கிட்டத் தட்ட 3,000 பெரிய ஏரிகள், கண்மாய்கள் போன்றவற்றை நவீனப்படுத்தி, ஆழப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 10 கோடி ரூபாய் செலவில் அரசு ஒரு திட்டத்தை எடுத்திருக்கிறது. ஏற்கெனவே பொதுப்பணித் துறையினரால், இருக்கக் கூடிய ஏரிகளையும், கண்மாய்களையும் வாய்ப்பு ஏற்படுகின்ற நிலைமைக்கேற்ப பணம் ஒதுக்கி, இன்றைக்கு அந்த ஏரிகளின் கரைகளைப் பலப்படுத்தி, ஆழப்படுத்தும் நடவடிக்கை நடந்து வருகின்றது. மூன்றாவதாக, இப்போது, ஏரி குளங்களை ஆக்கிரமிப்பு செய்து நீர் வரத்து அதிகமாக இருந்தாலும் கொள்ளளவை குறைத்து விடுகிறார்களே அதைத் தடுப்பது எப்படி என்பதை அரசு தீவிரமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்தால் மாண்புமிகு உறுப்பினர் கருதுகின்ற பல்வேறு எண்ணங்கள் திட்டங்களாக நடைமுறைப்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது.

விளவங்கோடு தாலுகா மடிச்சல் கால்வாய் திட்ட வேலைகள்.

*வினா எண் 278—திரு. டி. மணி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகாவில் மடிச்சல் கால்வாய் திட்ட வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: கேரள அரசு நெய்யாறு அணையிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஒப்பந்தப்படி 150 கன அடி தண்ணீர் விடும் போது இத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மடிச்சல் கால்வாய்த் திட்டம் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் இதுவரையிலும் இந்த 150

கனஅடி தண்ணீர் தருவதாக ஒரு ஒப்பந்தம் 2 அரசுகளுக்கும் இல்லை என்பதாகும். அதற்கு மத்தியிலே கடந்த காலத்திலேயிருந்த அரசாங்கத்திடமிருந்து, அதனுடைய அதிகாரிகளிடமிருந்து—இன்னொரு 80 கன அடி முதல் 110 கன அடி வரை தண்ணீர்தான் தரமுடியும் என்ற ஒரு குறிப்பை ஏற்கெனவே நான் மாண்புமிகு அமைச்சருடைய கையிலே கொடுத்திருக்கிறேன். இருந்தாலும்கூட, இப்போது இந்தத் திட்டம் 1977-க்கு முன்னாலே சீரணிப் படையினராலே வெட்டப்பட்டு அந்தக் கால்வாய் இருக்கிறது. அந்தக் காலக்கட்டத்திலே 9 குளங்களுக்கு நிரந்தரமாக தண்ணீர் கொடுத்து வந்தார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இப்போது இருக்கின்ற கால்வாயை கொஞ்சம் அகலப்படுத்தி, இந்த 9 குளங்களுக்கும், ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கின்ற அளவில், வருகின்ற தண்ணீரிலே ஒரு சின்னப் பகுதியை மட்டும் கொடுக்கின்ற நிலையை உருவாக்கி திட்டத்தை அமுலாக்க அரசு முன் வருமா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்குத் தரப்பட்ட குறிப்பின்படி தமிழக அரசு 1978-ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்ற அடிப்படையில் ரூபாய் 18.10 இலட்சத்திற்கு அனுமதி ஏற்கெனவே வழங்கியது. இந்தத் திட்டத்தை நாம் எடுத்துக்கொள்கின்றபோதுதான் கேரள மாநில அரசும் இந்த மாநில அரசும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் நெய்யாறு அணையிலிருந்து கேரள அரசு தமிழ் நாட்டுக்கு விடும் என்று எதிர்பார்த்து இந்தத் திட்டத்தைத் தீட்டினோம். ஆனால், அவர்கள் அப்படி நாம் எதிர்பார்த்த ஒப்பந்தப்படி தண்ணீர் விடவில்லை. வினாடிக்கு 80 கன அடி முதல் 100 கன அடி தண்ணீர்தான் வருகிறது. எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக பயன் இருக்காது என்ற ஒரு கருத்தைச் சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் 110 கன அடி கொடுப்பதாக ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதுகுறித்து நான் விசாரித்து இந்த 150 கன அடி போதும் என்று கருதினால் வினாடிக்கு 110 கன அடி கூட இருந்தாலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்ற நிலைமை இருக்குமானால் 150 கன அடி வரவேண்டுமென்று நாம் முயற்சித்தாலும் இந்தத் திட்டத்தை நாம் ஒத்திவைக்காமல் நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக்களை அரசு பரிசிலிக்கும்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி எல்லாம் எற்கெனவே கால்வாய் இருக்கின்றது. இந்தக் கால்வாயை சீரமைத்தாலே போதுமானது. அந்த இடது புறக் கால்வாயிலே இப்போது வருகின்ற 80 கன அடி ஆனாலும் சரி, 100 கன அடியானாலும் சரி, அதிலே வருகின்ற தண்ணீரிலே ஒரு 30, 40 கன அடி தண்ணீர் லீக்கேஜ்-ஆகி போய்க்கொண்டிருக்

கிறது. இந்த லீக்கேஜ்ஜை அடைத்து பழுது பார்த்தால் போதும். இந்த 9 குளங்களுக்கு தண்ணீர் கொடுக்கமுடியும். அதை கணக்கில் எடுத்துக்கொண்டு இதை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது குறித்து பரிசீலனை செய்யும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, லீக்கேஜ் ஆவதைத் தடுத்தாலே—உறுதியான அளவு இல்லாவிட்டாலும் கூட—ஓரளவு தண்ணீர் கொடுக்க முடியும் என்று என்ஜினீயர்கள் சொல்கிறார்கள். ஆனால், அதற்கு வேண்டிய, அந்த வேலை செய்வதற்கு, இந்த வறட்சி நிவாரண ஏற்பாடுகளில்கூட, அந்த வேலையைச் செய்யலாம் என்று சொன்னாலும் கூட, பொதுப்பணித்துறைக்கு சிமெண்ட் கிடைப்பதற்கு முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் பிரத்தியேகமாக கவனித்து இந்த வறட்சி நிவாரண வேலையில் இப்படிப்பட்ட லீக்கேஜை அடைப்பதற்குத் தேவையான சிமெண்ட்டை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணியில் சிமெண்ட் கிடைக்கவில்லை என்பதற்காக பணி நின்றுவிடக்கூடாது என்று கருதி இப்போது இறக்குமதி செய்யப்படுகின்ற சிமெண்ட்டில் அவர்களுக்கு தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அங்கே நிச்சயமாக சிமெண்ட் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு தொழில் துவங்கிடும் தொழிற்சாலைகள்.

*வினா எண். 279—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு புதிதாகத் தொழில் துவங்கும் தொழிற்சாலைகளுக்கு சிமெண்ட் பெர்மிட் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு புதிதாகத் தொழில் துவங்கும், தொழிற்சாலைகளுக்கு சிமெண்ட் வழங்கப்படும்.